விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalaijaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 295 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 23 திங்கட்கிழமை (10.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# காலிமுகத்திடலில் அமைதியின்மை பொதுமக்கள் ஐவர் பொலிஸாரால் கைது!



(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்து 5 பொதுமக்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக முன்னெடுக் 11

## தரம் 10 முதல் நுண்ணறிவு பாடம் அறிமுகம்

(கொழும்பு)

தரம் 10 முதல், செயற்கை நுண்ணறிவை ஒரு பாடமாக கற்பிக்கப்பட 11

## போதை வில்லைகளுடன் பெண் கைது

(தருமபுரம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பெண்ணொருவர் கைக்குழந்தையுடன் புல்மோட்டைப்பகு 11

## உள்ளூராட்சி உறுப்பினர்களை 50 சதவீதத்தினால் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50 சதவீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தற்போதுள்ள 8 ஆயிரம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் எண்ணிக் 11

# சர்வதேசத்தை பகைத்தால் நாட்டை மீட்க முடியாது

## அரசிடம் மைத்திரி இடித்துரை



(கொழும்பு)

**சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு ஒருபோதும் மீண்டெழ முடியாது. ஆகவே வெளிவிவகாரக் கொள்கையைத் திருத்தம் செய்வது மிகவும் அவசியம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் 2015ஆம் ஆண்டுக்கு 11

## 22 ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவு

### சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

22ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக நாட்டின் இறையாண்மை பலப்படுமாக இருந்தால், அதற்கு ஆதரவளிக்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன 11

# தனித்தனியாக கொள்ளையடித்த கும்பல் ஒன்று சேர்ந்து கொள்ளையடிக்க தயாராகிறது

## ராஜபக்ஷக்களை சாடிய சஜித்



(கொழும்பு)

நாட்டைத் தனித்தனியாகக் கொள்ளையடித்த குழுக்கள் தற்போது ஒன்று சேர்ந்து நாட்டைக் கொள்ளையடிக்க ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மஹியங் 11

# இந்தியா செல்லவுள்ளார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவிற்கு விரைவில் பயணமாகவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலருடன் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள் 11

## பருத்தித்துறை மீனவர்களுக்கு 19 இலட்சம் பெறுமதியான சுறா மீன்கள் சிக்கின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மீனவர்களால் 14 சுறா மீன்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 14 சுறா மீன்களும் சுமார் 2 ஆயிரம் கிலோவிற்கும் அதிகம் எனவும், அவற்றின் பெறுமதி சுமார் 19 இலட்சத்திற்கும் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-7,33)

## சென்னை - பலாலி விமான சேவை மீள ஆரம்பம்?

(கொழும்பு

சென்னைக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவை மூன்று வருடங்களுக்கு பின்னர் அடுத்த வார தொடக்கத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என தென்னி 02

## சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்லத் தயார் - ரணில்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு தெரிவுக்குழுவொன்றை பரிந்துரைப்பதாகவும், அந்தத் தெரிவுக்குழுவினால் எதிர்வரும் வருடம் ஜூலை மாதத்திற்குள் தீர்மானமொன்று முன்வைக்கப்படாவிட்டால் பொருத்தமான தேர்தல் முறைமை எதுவென்பதை தேர்ந்தெடுப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஜனாதிபதி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் பொன்.இராமநாதன், சீமாட்டி லீலாவதி இராமநாதன்

## நினைவுப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து நடைபெறும் மரபார்ந்த நிகழ்வுகளின் வரிசையில் சைவப் பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரையும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையும் இன்று 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் "யோகா உளவியலும் - மானுடர் வாழ்வும்" என்ற தலைப்பில் முன்னாள் கலைப் பீடாதிபதியும் மெய்யியல் துறையின் முன்னாள் தலைவருமான வாழ் நாள் பேராசிரியர் என்.ஞானக்குமரனும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையில் "சுதேசிய சமூக உருவாக்கம்; பத்திரிகைகளின் பங்களிப்பு குறித்த ஓர் உசாவல்" என்ற தலைப்பில் தென் கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் மொழிகள் துறையைச் சேர்ந்த தமிழ்த்துறை இருக்கைப் பேராசிரியர் எம்.ஏ.எம் றமீஸும் நினைவுப் பேருரையாற்றவுள்ளனர். (4-7)

# சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள 2023ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் த்வறியவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இல.610, காங்கேசன் துறை வீதி, இணுவில் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பாடவிதானத்தினை kumarandrama@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது 077 977 3538 வாட்சப் இலக்கம் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். பரீட்சைகள் 2023 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மூன்றாம் வாரம் நடை பெறும் என அறிவித்துள்ளார். (4-7)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**

**076 097 3127**


**கண்ணீர் அஞ்சலி**




எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **சாரதா ஜீவானந்தம்**
அவர்களது புதல்வன்

**செல்வன்**
**ஜீ.லோஜிதன்**

தோற்றம்: 19.09.2008 மறைவு: 09.10.2022

அவர்கள் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*துயர் பகிர்வில்:* **கல்லூரிச் சமூகம்**
**யா/மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பளை.** (C-5063)

## யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில்

# 2021 உயர்தரத்தில் 3ஏ பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2021 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 3ஏ பெற்ற 126 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (4-7)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடியில் 2 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- A9 வீதியில் இருந்து 100 m தூரம் இரண்டாவது காணி.
- மூன்று பக்கப் பாதை.
  1. கைதடி கோப்பாய் வீதி சமுர்த்தி வங்கி அருகாமை வீதி
  2. சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் அருகாமை வீதி.
  3. நவீலட் பாடசாலை அருகாமை.
- எல்லைகள்
  கிழக்கு - சித்த மருத்துவபீடம் மற்றும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை.
  வடக்கு - சமுர்த்தி வங்கி
  மேற்கு - நவீலட் பாடசாலை
- நன்னீர் ஊற்று நிலம்.
- செம்மண் காணி.
- 20 அடி பாதையுடன்.

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம் : **காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**

**077 658 5999**

(33064)


**31ம் நாள்**
**நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



10.09.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா முருகையா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.10.2022) திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நீலர்வளவு, தும்பளை,**
**பருத்தித்துறை.** (C-5064) **குடும்பத்தினர்**

## விமான...

லங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவைக் கட்டணம் கொழும்பு மற்றும் சென்னைக்கு இடையிலான விமானக் கட்டணங்களை விட கணிசமான அளவில் குறைவாக இருக்கும் என விமான சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன்.

இதேவேளை விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பாதுகாப்பு படைத் தளபதி சந்தன விஜய சுந்தர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)


**வேலைவாய்ப்பு**

- **அலுவலக செய்தியாளர்** (இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்** (பெண்கள்)
- **பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர்** (பெண்கள், சிங்கள மொழித் தேர்ச்சி)

**தகைமை**

- **க.பொ.த உயர்தரத்தில் சித்தி**
- **25 வயதுக்கு மேல்**
- **யாழ்.நகரத்தில் இருந்து 5 KM தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடம்**

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் (12.10.2022) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

**முகாமையாளர்**
**இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
தொடர்பு - **076 097 3121**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்

புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய பிரதமகுரு

## இராசையா இராசரூபசர்மா

அன்னையின் மடியில்- 13.07.1987
ஆண்டவன் மலரடியில்- 02.10.2020



அநீதி எனும் இருளுக்கு எதிரான
அருணாச்சலனின் அகல் விளக்கு ஐயா நீ

ஆ நிரை தொடக்கம் அனைத்துயிர்க்கும்
அறம் வேண்டும் என்பது ஐயா- உன் குறிக்கோள்

இன்னல்களை உண்டாக்கும் கலியுக கயவர்களை
கலங்கடிக்கும் ஐயா- உன் செயல்கள்

ஈன்ற பொழுது உன் தாய் எண்ணியிருக்க மாட்டாள்- ஐயா
உன் சான்றை தூய இதயமெல்லாம் துயரில் நினைவு
கொள்ளுமென்று

ஊரதீவு ஊரில் ஐயா நீ உயர்ந்து நின்றாய் கோபுரமாய்
உலகெங்கும் விழித்ததையா உன் முகப்புத்தகத்தில்

காக்கை வன்னியன் போல் உண்ட வீட்டுக்கே
இரண்டகம் செய்யும்
எம்மினத்தின் தொடர்ச்சியில் ஒன்று
உனதுயிர்க்கும் செய்ததையா துரோக நயவஞ்சகத்தை

எம்மினத்திற்கான நீதி காலம் தாழ்த்தப்படுவதைப் போல்
உன் நீதியும் நிராகரிக்கப்படுமோ எனும் ஐயத்தில்- எம் மனங்கள்

எக்கணமும் எண்ணுகின்றோம் பாணாவிடையானின்
நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை

மீண்டும் சிவன் நெற்றிக் கண்ணிலிருந்து உருவாகட்டும் தீப்பொறிகள்
சூரர்கள் போல் உள்ள கயவர்களை அழிப்பதற்கு

ஆண்டுகள் இரண்டு போனாலும் உன் இழப்பை ஏற்க மறுக்கின்றது
எம் மனங்கள்
நீ மீண்டும் பிறந்து வா ஐயா எம் கண்ணீரை துடைப்பதற்கு.

(13059)

திதி: பௌர்ணமி பிரதமை

" இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

**10.10.2022 திங்கட்கிழமை
பௌர்ணமி பிரதமை தினமான
இன்று ஐயாவின் இல்லத்தில்
ஆத்ம சாந்தி பிரார்த்தனை
நடைபெறுகின்றது என்பதனை
அறியத்தருகின்றோம்.**

**கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.**

**தகவல்- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை நாசமாக்கிய ராஜபக்ஷக்களை கூண்டோடு கைது செய்யவேண்டும்

## அநுர வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டை அழித்த ராஜபக்ஷக்களைக் கூண்டோடு கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

தனது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காக இளைஞர்களிடம் அனுதாபம் தேடும் முயற்சியில் நாமல் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி மேலும் தெரிவித்ததாவது,

ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட ஒரே காரணத்துக்காக இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது அன்று அந்தக் கைதுக்கு எதிராகக் குரல் கொடுக்காத நாமல் ராஜபக்ஷ, இன்று சிறையிலுள்ள இளைஞர்களைச் சமூகமயப்படுத்த வேண்டும் என்று கூறுவது வெட்கக்கேடானது.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டத்தை பின்னால் இருந்து எவரும் வழிநடத்தவில்லை. இளைஞர்களும் மக்களும் தாமாகவே முன்வந்து போராடினார்கள்.

நாட்டைக்காக்கப் போராடியவர்களைக்கைது செய்யாமல்நாட்டை அழித்த ராஜபக்ஷக்களைத்தான் கூண்டோடு கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என தெரிவித்தார். (4-7)

# ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் மோதல்

## ரசிகர் ஒருவர் உயிரிழப்பு



இந்தோனேஷியா நாட்டில் கடந்த வாரம் நடந்த கால்பந்து போட்டியின் போது ஏற்பட்ட மோதலில் 139 பேர் இறந்தனர். இந்த சோக சம்பவம் மறைவதற்குள் ஆர்ஜென்டினாவில் நடந்த கால்பந்து போட்டியில் ரசிகர் ஒருவர் பலியாகியுள்ளார்.

ஆர்ஜென்டினாவில் கடந்த 6 ஆம் திகதி இரவு உள்ளூர் கால்பந்து போட்டி நடந்தது.

இதைக் காண ஏராளமான ரசிகர்கள் குவிந்திருந்தனர். மைதானம் முழுவதும் நிரம்பிய நிலையில், மேலும் ரசிகர்கள் வந்ததால் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

அவர்களை பொலிஸார் ஒழுங்குபடுத்தினர். அப்போது பொலிஸாருக்கும் ரசிகர்களுக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. உடனே பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினார்கள். இந்தச் சம்பவத்தில் ஒரு ரசிகர் இறந்தார். சிலர் காயம் அடைந்தனர்.

பொலிஸாரின் கண்ணீர்ப் புகைகுண்டு தாக்குதலில் இருந்து தப்பிக்க ஏராளமான ரசிகர்கள் மைதானத்தின் மையப் பகுதிக்குச் சென்றனர். உடனே போட்டி நிறுத்தப்பட்டது. (4)

# பும்ரா, ஜடேஜா இல்லாதது இந்திய அணிக்கு பாரிய இழப்பு

## ரவிசாஸ்திரி

20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் பும்ரா, ஜடேஜா இல்லாதது பெரிய இழப்பு என்று ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி சென்னையில் உள்ள தனியார் பள்ளியின் கிரிக்கெட் மைதான தொடக்க விழாவில் கலந்து கொண்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, ஓல்-ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் இடம் பெறவில்லை.

இது நிச்சயம் இந்தியாவுக்கு பெரிய இழப்பு தான்.



அதே சமயம் இவர்கள் இல்லாத அணியில் புதிய சம்பியன் வீரரை அடையாளம் காண்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2712

Search for people, places and things — Nageedram Home

**நந்திளி**

பக்கத்து வீட்டு பொண்ணு
ஒரு கிண்ணத்துல வச்சு
என்னமோ மூஞ்சில தேச்சுட்டு
இருந்துச்சு என்னனு
கேட்டா தக்காளி,
உருளைக்கிழங்கு, கொத்தமல்லி,
புதினா, தயிர் கலந்து மிக்சில
அரைச்சு பேசியல் பண்ணுதாம்
சரி கொடு நான்
கொஞ்சம் தேச்சுக்குறேன்னு
பொய் சொல்லிக்கிட்டு
வாங்கி தோசைக்கு தொட்டு
தின்னுட்டேன்

**ஆர்த்தி**

இந்த உலகத்துல நல்லவன் கெட்டவன்னு யாரும் இல்லை. மற்றவங்களுக்கு புடிச்ச மாதிரி இருந்தா நல்லவன் நமக்கு புடிச்ச மாதிரி இருந்தா கெட்டவன்



**சாக்சவி**

குத்துவிளக்கு
போல
பெண்களைத்
தேடுகிறன்றனர்
ஆண்கள்.
அலாவுதீன்
விளக்குகளைப்
போல
ஆண்களைத்
தேடுகின்றனர்
பெண்கள்.



**சபேசன்**

எல்லோரிடமும்
உதைபடும்
கால்பந்தாய்
இருக்காதே
சுவரில்
எறிந்தால்
திரும்பி
வந்து
முகத்தில் அடிக்கும் கைப்பந்தாயிரு



**சுதர்சன்**

காதலன்- நாம கல்யாணம்
பண்ணிக்கிட்டு
ஓடிப்போவாமா?
காதலி- செருப்பு பிஞ்சிடும்
காதலன்-நல்ல செருப்பா
போட்டுக்கிட்டு வாம்மா

**தருன்**

உன்னால முடியாதுன்னு யாராவது சொன்னா நீ நம்ப வேண்டியது அவங்கள இல்ல உன்னை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கால் நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

## நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு

(சாவகச்சேரி)

காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக கமக்கார அமைப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் கால்நடைகளை எதிர்வரும் மார்ச் மாதம் வரை கட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கால இடைவெளிக்குள் கால்நடை வளர்ப்போர் உரிய ஒத்துழைப்பினை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-30)

# தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் தின விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் தின விழா நாளை பி.ப 1.30 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் அதிதிகளாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி-30)

# பல்கலைக்கழக மாணவிக்கு மடிக்கணினி வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

வவுனியாப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கு அவரது கல்வி நடவடிக்கைக்காக கடந்த வெள்ளிக்கிழமை மடிக்கணினி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் நாட்டில் வசிக்கும் செ.விஜயரத்தினத்தின் நிதிப் பங்களிப்பில் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான மடிக்கணினியே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவியின் நான்காண்டு பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் அனைத்துக்குமான செலவீனங்களையும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் செ.விஜயரத்தினம் அவர்களே பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 612, செல்வாநகர், கிளிநொச்சியில் வசிக்கும் சந்திரகுமாரன் யாழ் அமுதனின் தேசிய அடையாள அட்டை (199917500940) வண்ணை சிவன்கோயில் அருகாமையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே தகுந்த ஆதாரங்களைக்காட்டி வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளவும். (நி)

# தனங்கிளப்பு நெற்செய்கையாளர்களுக்கு இன்று யூரியா வழங்கல்

## கமக்கார அமைப்பு தெரிவிப்பு

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு இன்று கைதடி கமநல சேவை நிலையத்தில் வைத்து காலபோக செய்கைக்கான யூரியா உரம் வழங்கப்படும் என கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த தினத்தில் கைதடி கமநல நிலையத்திற்கு யூரியா பெறவரும் செய்கையாளர்கள் 2022 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிச்சிட்டை, சம்மேளன சந்தாப்பணம் செலுத்திய சிட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை சகிதம் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மூன்று பரப்பிற்கு ஒரு கிலோகிராம் என்ற அடிப்படையில் முதற்கட்ட யூரியா உரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-30)

# பாரதியார், விபுலானந்தர் சிலைகள் யாழில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர் மற்றும் பாரதியாரின் திருவுருவச்சிலைகள் நேற்று காலை அகில இலங்கை சைவ மகாசபை மற்றும் யாழ். மாநகர சபையால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் அகில இலங்கை சைவமகா சபையினால் உருவாக்கப்பெற்ற சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலை தென் கையிலை ஆதின குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாநகர சபையால் உருவாக்கப்பெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடைய திருவுருவ சிலையினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி றெமிடியசினால் திறந்து வைக்கப்பட்டது. (நி-18-33)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள்

(குப்பிழான்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தினரின் ஏற்பாட்டில் கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.

போட்டிகளுக்கான ஆக்கங்களை "சமகால மாற்றங்களும் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்களும்" எனும் கருப் பொருளில் அமைத்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் ஆக்கங்களை கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம், இல:290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை 021 205 4224, 076 638 5563 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (நி-18)

# இராசிபலன்

10.10.2022
புரட்டாதி 23, திங்கட்கிழமை
பிரதமை பின்னிரவு 2.40 மணிவரை
ரேவதி பிற்பகல் 5.43 மணிவரை

சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
உலக மனநல தினம்

சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்


மேஷம்
தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுற்றத்தாரின் வருகையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


கடகம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


துலாம்
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கௌரவமான நாள்.


மகரம்
உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.


ரிஷபம்
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.


சிம்மம்
செய்தொழிலில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பண விரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்
பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கும், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவ முண்டு.


கும்பம்
குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.


மிதுனம்
மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


தனுசு
கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


மீனம்
மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

செய்ய முடித்தவன் சாதிக்கிறான் செய்ய முடியாதவன் போதிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்

‘தேடல் உள்ள உயிர்களுக்கு தான் நாளும் பசியெடுக்கும்’

நீங்கள் எவ்வளவு தூரம் தேடுகிறீர்களோ அவ்வளவு தூரம் அறிவு நிறைந்தவராக மாறுவீர்கள். ஒரு காலம் இருந்தது எங்களுடைய சமூகம் பல சமூகங்களுக்கு முன்னுதாரணமாக சொல்லப்பட்டது.

ஆனால் இன்று நாங்கள் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம் என்று பேசிக் கொண்டு இருக்கிறோம்.

அப்படியென்று சொன்னால் அதற்கான காரணம் என்ன? பரபரப்பான பிரமாண்டமான காட்சிகளுக்கு எங்களுடைய கண்களை தொலைத்து விட்ட எங்களால் மெதுவாக நுகரக் கூடிய எழுத்துக்களை நுகர முடிவதில்லை. ரிவி பெட்டிக்குள்ளும் கைத்தொலைபேசிக்குள்ளும் சிந்தனை அறிவை அடமானம் வைத்த எங்களால் படலை தாண்டி சிந்தனையை உருவாக்க முடிவதில்லை என்பதே வருத்தம்.

இண்டைக்கு எல்லாம் புத்தகங்கள் அதிகமாக விற்கப்படுகின்றன. ஆனால் சிந்தனையாளர்கள் உருவாவதில்லையே. புத்தகங்களை வாங்கி அடுக்குவதில் என்ன பெருமை இருக்கிறது. எத்தனை புத்தகங்களால் நீ உருவாகி இருக்கிறாய் என்பதில் தான் பெருமை இருக்கிறது.

என்னுடைய நண்பன் சொல்வான் நான் இருபது புத்தகங்களை வாங்கினேன். முப்பது புத்தகங்களை வாங்கினேன்னு. இங்கு எவராலும் புத்தகங்களை வாங்க முடியாது. சிந்தனைகளை எப்படி உங்களால் வாங்க முடியும். வெறும் காகிதங்களையும் அச்சு கூலிகளையும் தான் வாங்கி வைத்துள்ளீர்கள்.

அறிவார்ந்த சமூகம் உருவாக வேண்டும் என்றால் சிந்தனைகள் உயர்வாக இருக்க வேண்டும். சிந்தனை உயர்வாக இருக்க வேண்டும் என்றால் அறிவு நிறைந்த புத்தகங்களை தேடி படிக்க வேண்டும். அறிவுள்ள புத்தகங்களால் தான் பயனுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்.

ஒரு புத்தகம் உன் வாழ்க்கையை மாற்றும். கண்ணதாசன் ஒரு பாடல் வரி உன் சிந்தனையை நல்வழிப்படுத்தும். புத்தகம் படிப்பது என்பது தவம். வரிக்கு வரி உன் பயணத்தை மாற்றக் கூடியது. புத்தகங்கள் நின்று நிதானமாக உரக்க பேசக் கூடியது. எழுத்துக்கள் போல் பேசக் கூடியவை வேறு எதுவும் இல்லை.

எவனோ ஒருவன் எழுதிய கருத்தை நான் ஏன் ஏற்க வேண்டும். என்றோ சொல்லப்பட்டவை எப்படி என் வாழ்க்கையை மாற்றும். புத்தகம் என்பதால் மட்டும் படிக்க வேண்டுமா? அறிவார்ந்த குழந்தைகளே எல்லா புத்தகமும் பூசைக்கு உரியவை இல்லை. சில புத்தகங்கள் கிழிக்கப்பட வேண்டியவை அதனால் படித்துக் கிழித்து விடுங்கள்.

ஒரு புத்தகம் என்ன செய்யும் அறிவு மிகுந்த சிந்தனையாளர்களை உருவாக்கும். புதிய கருத்துக்களுக்கு உயிர் கொடுக்கும். நல்லது கெட்டதை சொல்லி விடும். இலங்கையின் ஏழ்மை குடிசையில் வாழும் உன்னை பொன்னியின் செல்வரோடு பயணப்பட செய்யும். சோழ தேசம் வரை போய் வர சொல்லும். புரட்சியாளர்களுடன் கை குலுக்க சொல்லும் பாஸ்போட் இல்லாமல் நாடு கடக்க சொல்லும்.

வெள்ளைக் குதிரையில் ஏறி வானில் பறக்க சொல்லும். கற்பனை கதவைத் தட்டி விடும். உன்னை எழுத சொல்லும். உன்னை உருவாக்க சொல்லும்.

புத்தகங்களை வாசியுங்கள். சிந்தனைகளை உருவாக்குங்கள். அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புங்கள். கேள்வி கேளுங்கள். புரட்சி வெடிக்கட்டும்.

**செல்வராசா துவாரகன்.**
**பொதுசன நூலக வாசகன்.**

# சீலப்பதிகாரம்

## மதுராபதியின் இயலாமை

ஆகவே, அவன் வயதான ஒரு பிராமணன் வடிவெடுத்தான் கண்ணகியின் முன்னால் தோன்றினான்.

பத்தினித் தெய்வமே உனக்குத் தவறு இழைக்கப்பட்ட அன்றே இந்த நகரத்தைத் தண்டிக்க எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது.

ஆகவே நீங்கள் எனக்கு உத்தரவு இடுங்கள் யார் யாரெல்லாம் இந்தத் தீயிலிருந்து விடுவிக்கப்படத் தகுதியானவர்கள் என்பது குறித்துச் சொல்லுங்கள் என்று பணிவாகக் கேட்டான்.

கண்ணகி சில விநாடிகள் யோசித்தான்.

மொத்த மதுரையும் அதன் மக்களும் எரியட்டும் என்று சாபமிட்டால் எனக்கும் இந்தப் பாண்டியனுக்குப்பும் என்ன வித்தியாசயம் இருக்கும்?

‘அந்தணர் ,அறிவோர் பசுக்கள், பத்தினிப் பெண்டிர், முதியோர், குழந்தைகள் ஆகிய இவர்களை நெருப்பு தீண்டாமல் இருக்கட்டும் மற்ற அனைத்தும் எரியட்டும் என்று சொன்னாள். அக்னிதேவன் திருப்தியடைந்தான். தன் கடமையை நிறைவேற்றப் புறப்பட்டான்.




மறுவிநாடி புகையோடு சேர்ந்த தீ நாக்குகள் எங்கும் பரவின முதலில் பாண்டியனும் அவன் மனைவியும் அனைத்து சேவகர்களும் முப்படைகளும் அரண்மனையும் எரிந்து சாம்பலானர்கள். காக்கும் . தெய்வங்களும் தேவதைகளும் இதைத் தடுக்கிற சக்தி இல்லாமல் அந்தக் கூடல் நகரை விட்டு வெளியேறினார்கள்.

அடுத்து வீதிகளும் கடைத்தெருக்களும் மக்கள் வாழும் பல்வேறு பகுதிகளும் ஒவ்வொன்றாகத் தீக்கிரையாகின. தீயிலிருந்து விடுவிக்கப்பட்ட அறவோரும் கற்புடைய பெண்களும் கண்ணகியின் தெய்வ சக்தியில் மதுரை எரிவதைக் கண்டார்கள். ‘யார் இந்தக் கற்புக் கனல்? எங்கிருந்து வந்தாள்? இப்படிப்பட்ட சக்தி நிறைந்தவளுக்கு எப்படி அநீதி இழைக்கப்பட்டது’ என்று அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார்கள்.

சில நிமிடங்களில் மதுரையின் குதூகலமும் உற்சாகமும் மறைந்தன. எங்கும் சோக மயமாயிற்று அந்த மாநகரம் புகையும் சாம்பல் குவியல்களுமாக மாற ஆரம்பித்தது.

கண்ணகிக்கு இன்னும் கோபம் தணியவில்லை. ஒழுங்கில்லாமல் மூச்சு விட்டபடி நகரின் பல பகுதிகளிலும் சுற்றித் திரிந்தாள். தீப்பிழம்புகளைப் பார்தவாறு இருந்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 96

ரஷ்யா பணம் கொடுக்க வேண்டிய நிறுவனங்கள் பணம் பெற மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். சர்வதேச வங்கி அமைப்பில் நிகழும் இந்த குழப்பத்தால் விளைந்த ஆபத்து மிகவும் பெரியது என்று சிலர் கூறுகிறார்கள். SWIFT இலிருந்து துண்டிக்கப்படுவது ரஷ்யாவின் பொருளாதாரத்தை 5% சுருக்கும் என்று ரஷ்யாவின் முன்னாள் நிதியமைச்சர் அலெக்ஸி குட்ரின் கூறியுள்ளார்.

ஆனால் ரஷ்யாவின் பொருளாதாரத்தின் நீடித்த தாக்கம் குறித்து சந்தேகம் உள்ளது. தனது சொந்த பணப்பரிவர்த்தனை முறையை வைத்துள்ள சீனா போன்ற, பொருளாதாரத் தடைகளை விதிக்காத நாடுகளின் வழியாக ரஷ்ய வங்கிகள் பணம் செலுத்தக்கூடும்.

**பெப்ரவரி 26, 2022**

ஜப்பானுக்குச் சொந்தமான எம்வி நமுரா குயின் என்ற சரக்குக் கப்பல் 20 பணியாளர்களுடன் கருங்கடலில் ரஷ்ய ஏவுகணையால் தாக்கப்பட்டது. MV Millennial Spirit என்ற மால்டோவன் கப்பலும் ஒரு ரஷ்ய போர்க்கப்பலால் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி பலத்த சேதம் ஏற்பட்டது.

கீவ்வில் தங்கியிருந்த ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தன்னை வெளியேறுவதற்கான அமெரிக்க சலுகைகளை மறுத்து, உக்ரைனிய துருப்புக்களுக்கு அதிகமான வெடிமருந்துகளை அமெரிக்காவிடம் கோரினார்.

**கீவில் உள்ள ஒக்மடிட் குழந்தைகள் மருத்துவமனையில் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் ஆறு வயது சிறுவன் கொல்லப்பட்டான் மற்றும் பலர் காயமடைந்தனர்.**

மோசமான திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவை வடக்கு உக்ரைனில் உள்ள ரஷ்ய இராணுவத்தின் மன உறுதி மற்றும் தளவாட சிக்கல்களுக்கு இட்டுச் செல்கின்றன என்று போர் ஆய்வுக்கான நிறுவனம் (ISW) கூறியது. ரஷ்யப் படைகள் பெற்றோல் மற்றும் டீசல் எரிபொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொண்டதாக அமெரிக்க மற்றும் இங்கிலாந்து அதிகாரிகள் தெரிவித்தனர். இது டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கும் அவர்களின் முன்னேற்றத்தை குறைப்பதற்கும் வழிவகுத்தது.

**வெளிநாடுகளுக்கு புடின் விடுக்கும் எச்சரிக்கை**

ரஷ்ய நடவடிக்கையில் தலையிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என விளாடிமிர் புடின் நேரடியாக மற்றும் மேற்கு நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். விளாடிமிர் புடினின் உரைக்கு மத்தியில் கீவ், கார்கிவ், ஒடெசா மற்றும் உக்ரைனின் பிற நகரங்களில் தாக்குதல்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**புடின் உரை எச்சரிப்பதற்கான காரணம்**

உக்ரைன் மீதான இராணுவ அடக்குமுறைக்கு மத்தியில், ரஷ்ய நடவடிக்கையில் தலையிட முயற்சிக்க வேண்டாம் என்று புடின் மற்ற நாடுகளை எச்சரித்தார். தனது நாட்டையும் மக்களையும் காப்பதே தனக்கு முக்கியம் என்றும் ரஷ்யாவின் இறையாண்மையை சீர்குலைக்க அச்சுறுத்த முயற்சிக்கும் எந்த ஒரு நாட்டிற்கும் ரஷ்யா தக்க பதிலடி கொடுக்கும் எனவும் வரலாற்றில் இதுவரை சந்திக்காத வகையிலான பாதிப்புகளை ஏற்படுத்தும் என புடின் எச்சரித்துள்ளார். உக்ரைன் இராணுவ வீரர்கள் உடனடியாக ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு தாயகம் திரும்ப வேண்டும் என்று புடின் வலியுறுத்தியுள்ளார்.

**இந்தியா இயன்றதை செய்யும்**

புதுடில்லி உக்ரைன் நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, பிரதமர் நரேந்திர மோடியுடன் போர் சூழல் குறித்து பேசியுள்ளார். இதில் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைனுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி கோரிக்கை வைத்த நிலையில், அவரிடம் இந்தியா இயன்றதை செய்யும் என்று பிரதமர் மோடி உறுதியளித்தார்.

ரஷ்ய ராணுவத்தை தடுக்க பாலத்தை தகர்த்து மனித வெடிகுண்டாக சிதறிய உக்ரைன் வீரர்



**ரஷ்ய இராணுவத்தை தடுக்க பாலத்தை தகர்த்து மனித வெடிகுண்டாக சிதறிய உக்ரைன் வீரர்**

ரஷ்யாவின் இராணுவ டாங்கியை தடுப்பதற்காக உக்ரைன் இராணுவ வீரர் ஒருவர் குண்டு வைத்து பாலத்தை தகர்த்து தானும் உயிர் தியாகம் செய்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(தொடரும்)

# உக்ரைனில் மீண்டும் பாரிய புதைகுழிகள்



(கீவ்)

உக்ரைனில் ரஷ்யப் படைகள் கைப்பற்றி தற்போது உக்ரைன் வீரர்கள் மீளக் கைப்பற்றியுள்ள லைமன் பகுதியில் பெருந்தொகையான சடலங்களைக் கொண்டுள்ள புதைகுழி ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

பிரதேசத்திற்கான ஆளுநர் பாவ்லோ கிரிலிங்கோ குறிப்பிடும் போது, இதில் எத்தனை உடல்கள் புதைக்கப்பட்டு இருக்கலாம் என்பது இன்னமும் அறியப்படவில்லை.

எவ்வாறாயினும் இந்தப் புதைகுழியில் இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரு தரப்பினரதும் சடலங்கள் இருக்கலாம் எனத் தெரிவித்தார். (நி)

# கடலில் மூழ்கி தத்தளித்த மீனவர்களைக் காப்பாற்றி இந்தியாவிடம் ஒப்படைத்த பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

கடலில் மூழ்கி தத்தளித்த இந்திய மீனவர்கள் 6 பேரை காப்பாற்றி இந்தியாவிடம் கையளித்துள்ளது பாகிஸ்தான் கடற்படை.

இது தொடர்பாக பாகிஸ்தான் கடற்படை வெளியிட்டிருந்த உத்தியோகபூர்வ டுவிட்டர் ஒன்றிலே நேற்று முன்தினம் இந்தியாவைச் சேர்ந்த 6 மீனவர்கள் இந்தியா பாகிஸ்தான் இடைப்பட்ட சர்வதேச கடல்பகுதியில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில், அங்கு சென்ற பாகிஸ்தான் ரோந்து படகுகள் அவர்களைக் காப்பாற்றி மீண்டும் இந்தியக் கடற்படையிடம் கையளித்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 20 மீனவர்கள், 4 வருட சிறை தண்டனை அனுபவித்த தன் பின்னர் பாகிஸ்தானால் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இமயமலையில் பனிச்சரிவு 26 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இமயமலையில் பனிச்சரிவில் சிக்கியதில் சுமார் 26 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


சீர்றற வானிலை காரணமாக நான்காவது நாளாகவும் குறித்த பகுதியில் தேடுதல் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

41 மலையேறும் பயிற்சியாளர்களைக் கொண்ட குழு, கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியாவின் வடக்கு மாநிலமான உத்தரகாண்டில் உள்ள திரௌபதி கா தண்டா மலையின் உச்சிக்கு அருகே ஏற்பட்ட பாரிய பனிச்சரிவில் சிக்கிக் கொண்டது.

"நாங்கள் இதுவரை 26 உடல்களை மீட்டுள்ளோம். அவர்களில் 24 பேர் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் இரண்டு உடல்கள் பயிற்றுவிப்பாளர்களின் உடல்கள்" என்று அரசு நிறுவனமான நேரு இன்ஸ்டிடியூட் ஆஃப் மவுண்டேனிரிங் அதிகாரி தெரிவித்தார்.

பயணத்தின் மூன்று உறுப்பினர்கள் காணவில்லை எனவும் அதிகாரி தெரிவித்தார். (நி)

# கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் பாலத்தில் தீ



(மொஸ்கோ)

கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் பாலத்தில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

பாலத்தில் இருந்த எரிபொருள் தாங்கி தீப்பிடித்து எரிவதாக ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாலம் ஐரோப்பாவிலேயே மிக நீளமானது. மற்றும் கிரிமியாவை ரஷ்யாவின் போக்குவரத்துடன் இணைக்கிறது.

குறித்த பாலம் 2018 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. தீ விபத்து காரணமாக ரஷ்யா-கிரிமியாவிற்கு இடையிலான வீதிப்போக்குவரத்து மற்றும் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி வலயங்களாக இலங்கை உட்பட 48 நாடுகள் பிரகடனம்

(கொழும்பு)

**தினமும் சுமார் 828 மில்லியன் மக்கள் பசியுடன் உறங்கச் செல்வதாக உலக உணவுத்திட்டம் கவலை வெளியிட்டுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையொன்றின் ஊடாக இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பின்மை நிலை உயர்வடைந்து வருவதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு முன்னதாகவே தொடர்ச்சியான காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தங்கள், பிராந்திய ரீதியான முரண்பாடுகள், கொரோனா வைரஸ் பரவல் என்பன உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் தாக்கங்களைத் தோற்றுவித்ததுடன் உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கும் காரணமாக அமைந்தன.

இந்நிலவரம் உக்ரைன் - ரஷ்யப் போரை அடுத்து மேலும் தீவிரமடைந்தது. இது குறிப்பாக உணவு மற்றும் உரம் ஆகியவற்றின் விலைகள் பன்மடங்காக அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன் இறக்குமதிகளில் தங்கியிருக்கும் நாடுகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாகத் தோற்றம் பெற்ற உணவுப் பாதுகாப்பின்மையினால் உலகளாவிய ரீதியில் சுமார் 345 மில்லியன் மக்கள் மிகுந்த அச்சுறுத்தல் நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும் உணவுப் பாதுகாப்பின்மை என்பது உலகளாவிய ரீதியில் ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள நிலையில் அதன்விளைவாக 48 நாடுகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் பெரும்பாலான நாடுகள் குறைந்த வருமானம் பெறும் நாடுகளாகக் காணப்படுவதுடன் இறக்குமதிகளுக்கான உக்ரைன் மற்றும் ரஷ்யாவிடம் பெருமளவிற்குத் தங் கியிருக்கும் நாடுகளாகவும் உள்ளன என்று உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியிருப்பதுடன் அந்த 48 நாடு களில் ஒன்றாக இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

சர்வதேச நாணய நிதியத்துடனான

## அடுத்த சுற்று பேச்சுக்கு தயாராகிறது இலங்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் வாரம் முன்னெடுப்பதற்கு இலங்கை திட்டமிட்டிருக்கின்றது.

அதன்படி நிதி இராஜாங்க அமைச்சரும் திறைசேரியின் செயலாளரும் மத்திய வங்கி அதிகாரிகளும் அடுத்த வாரம் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளைச் சந்திக்கவிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

---


# கல்வியில் மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில்**

திறன் பெற்ற பின்வரும் மாணவர்களை வாழ்த்துவதுடன் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.


செல்வன் ர.அனித்ஜன்


செல்வன் பு.இனுசாந்


செல்வி ச.சஜீனா

• பல்கலைக்கழகம் தெரிவானோர்

**விஞ்ஞானப் பிரிவு**

ர.அனித்ஜன்- பௌதீக விஞ்ஞானம்

பு.இனுசாந் - நன்நீரியல் விஞ்ஞானம்

**கலைப்பிரிவு**

ஜே.அபிஷா- கலைப்பீடம்

வி.சஞ்சிகா- நுண்கலைப்பீடம்

ச.விதுசிகா- நுண்கலைப்பீடம்

• இறுதியாக நடைபெற்ற க.பொ.த(உ/த) சித்தி பெற்றோர்

**வர்த்தகம்**

ச.சஜீனா-3 ஏ, உ.வினிஸ்ரிகா-3சி, கே.அனுஷா-2சி,எஸ்

**கலைப்பிரிவு**

ச.பிரியங்கா- ஏ,2பி, பி.விஷ்ணுஜன் -ஏ,2சி, கே.கரிகண்ணா -பி,2சி

**தொழில் நுட்பப்பிரிவு**

இ.கேசவன் 2பி,சி

• தமிழ்த் தினப் போட்டி- வடமாகாணம்

பா.கௌசிகா- குறுநாடக ஆக்கம்- 2 ஆம் இடம்

நெறிப்படுத்திய ஆசிரியர்-திருமதி.ம. நந்தகுமார். (சி-5061)

நலன்விரும்பிகள்


---

## தென்னந்தோப்புகளில் 'வெள்ளை ஈ' தாக்கம் செவ்விளநீருக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

(கொழும்பு)

இலங்கையில் செவ்விளநீருக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

'வெள்ளை ஈ' என்ற பூச்சியால் செவ்விளநீர் அதிகம் பாதிக்கப்படுவதால் டிசம்பர் மாதத்துக்குள் இந்த தட்டுப்பாடு ஏற்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.தென்னந்தோப்புகளில் பரவும் வெள்ளை ஈ பூச்சி செவ்விளநீர் குலைகளின் மஞ்சள் நிறத்தில் ஈர்க்கப்படுவதால் இவற்றை அதிகளவில் பாதித்துள்ளது.

இம்முறை பெரும்பாலும் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு பயிரிடப்படுகிறது. பெரும்பாலான செவ்விளநீர் காய்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு 95 இலட்சம் செவ்விளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு வெள்ளை ஈ பாதிப்பு பரவி வருவதால் எதிர்காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையும் பாதிக்கப்படலாம்.

இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந்தோப்புகள் வெள்ளை ஈ தாக்குதலால் சேதமடைந்துள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.

இருப்பினும், வெள்ளை ஈயை அழிக்கக்கூடிய பூச்சிகொல்லி அல்லது பிற பூச்சிகள் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

---

## இரு வாரங்களில் வழமைக்குத் திரும்பும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம்

(கொழும்பு)

திருத்தப் பணிகள் காரணமாக கடந்த ஜூன் மாதம் இடைநிறுத்தப்பட்ட நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் அலகு எதிர்வரும் இரண்டு வாரங்களில் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளது. நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் தலா 300 மெகாவோட் கொண்ட மூன்று அலகுகள் செயற்படுகின்றன.

அதன் இரண்டாவது அலகு திருத்தப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளதோடு முதலாம் மற்றும் மூன்றாம் அலகுகளின் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்படி, நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் இருந்து தேசிய மின்கட்டமைப்புடன் 600 மெகாவோட் மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இரண்டு நிலக்கரி கப்பல்களுக்கான முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வன்முறைக்கு உள்ளாகும் மாணவர்களின் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

**அண்மைக் காலமாக பாடசாலை மாணவர்கள் உடல் ரீதியான வன்முறை மற்றும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவது அதிகரித்து வருவதாக தேசிய சிறுவர் நலன்புரி அதிகார சபை தெரிவித்துள்ளது.**

பாடசாலைச் சூழலில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்து அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார். (நி)

## மரக்கறிச் செடிகளை பூச்சாடிகளில் நாட்டுங்கள்

அனைத்துப் பொருட்களின் விலைகளும் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

அதிலும் குறிப்பாக மரக்கறிகளின் விலைகள் சொல்லிமாளா.

அதிக விலையில் மரக்கறிகள் விற்கப்படும் போது, எமது நாளாந்த உணவில் மரக்கறிகளின் அளவும் எண்ணிக்கையும் குறையவே செய்யும்.

இந்த நிலைமை எமது உடல் ஆரோக்கியத்தில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அது விடயத்தில் நாம் மிகவும் கருசனையுடையவர்களாக இருக்க வேண்டும்.

உண்மையில், வீட்டுத்தோட்டம் செய்வதில் ஒவ்வொருவரும் அக்கறை கொண்டு செயற்பட்டால், எங்கள் வீட்டுத்தோட்டத்தில் விளைந்த கத்திரி, தக்காளி, வெண்டி என்பன அந்தந்த வீட்டு உறுப்பினர்களின் மரக்கறித் தேவையை ஈடுசெய்யும்.

எனினும் ஏனோ தெரியவில்லை வீட்டுத் தோட்டம் செய்வதில் நம்மவர்கள் இன்னமும் கருசனைக்குறைவோடு இருக்கின்றனர்.

அதேவேளை மழைகாலம் ஆரம்பித்து விட்டால், இனி நம்மவர்கள் பூச்செடிகளை வைப்பதிலும் குறோட்டன் வகைகளை நடுவதிலும் தீவிரமாக ஈடுபடுவர்.

உண்மையில் பூச்செடிகளுக்குப் பதிலாக ஒவ்வொரு பூச்சாடியிலும் கத்தரிச் செடியை வெண்டியை, தக்காளி நாற்றை நட்டுப் பராமரிப்போமாயின், அவை பூத்துக் காய்த்துக் குலுங்கும்போது, அதனால் ஏற்படுகின்ற மகிழ்வும் ஆனந்தமும் அற்புதம்மிக்கது.

அதேநேரம் எங்கள் வீட்டில் உள்ள பூச்சாடிகளில் வைக்கப்பட்டுள்ள மரக்கறிச் செடிகள் காய்த்திருக்கும்போது அதன் அழகு மற்றவர்களையும் ஈர்க்கவல்லது.

இதற்கும்மேலாக, இது எங்கள் வீட்டில் காய்த்த கத்தரி, இது நாங்கள் நட்ட வெண்டிச் செடி தந்த காய், அது எங்கள் பூச்சாடியில் உள்ள தக்காளி தந்த பழம் என்ற மனநிலையோடு அவற்றைக் கறி ஆக்கி உண்ணுவோமாயின், அதற்குள் இருக்கக்கூடிய சந்தோசம் நம் ஆயுளையம் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கவல்லது.

எனவே வீடுகள் தோறும் வீட்டுத் தோட்டத்தை அமைப்பதில் நாட்டம் கொள்ளுவோம்.

பூச்சாடிகளில் மரக்கறிச் செடிகளை நட்டு பயன்பெறுவோம்.

இவ்வாறு நாம் செய்யும்போது எங்களுக்குத் தேவையான மரக்கறிகளை எங்கள் வீட்டு வளவில் இருந்து பெற்றுக் கொள்வதுடன் அதன்மூலம் மரக்கறிக்கான செலவையும் மீதப்படுத்த முடியும்.

இவ்வாறு பூச்சாடிகளில் மரக்கறிச் செடிகளை நட்டு அதிலிருந்து தூயமரக்கறிகளைப் பெற்றுக் கொள்கின்ற நல்ல காரியத்தை சர்வதேச உளநல நாளாகிய ஒக்டோபர் 10 ஆம் திகதியாகிய இன்று ஆரம்பிப்போம்.

இதை நாம் செய்வோமாயின் இதிலிருந்து, எங்கள் உளநலமும் உன்னதம் பெறும் என்பது சத்தியமான உண்மை.

## பதில் பிரதம நீதியரசராக புவனெக்க பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி புவனெக்க அலுவிஹாரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப் பிரமாணம் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார். (நி)

## ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு இணங்க நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மை ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்காக வழங்கக் கூடிய பங்களிப்பு தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர் நாட்டுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் இராஜதந்திரியான எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேயின் வெளிவிவகார ஆலோசகராக கடந்த 2000 ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராக செயற்பட்டு தனது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் அவரின் செயற்பாடுகளுக்கு தென்னிலங்கையில் சிங்கள பிரதான அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

அவர் தற்போது ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளராக செயற்பட்டு வருகிறார். (நி)

## கடவுச் சீட்டு பெறுவோரின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரிப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களுக்குள் 7 இலட்சத்திற்கும் அதிகமான கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும்குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 7 இலட்சத்து எழுநூற்று முப்பத்து மூன்று கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளரும் ஊடகப் பேச்சாளருமான பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டின் 12 மாதங்களுக்குள் 3 இலட்சம் கடவுச் சீட்டுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதால் முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. (நி)

## பாலுக்கான கட்டணம் மேலும் அதிகரிக்கும் நிலை

(கொழும்பு)

ஒரு லீற்றர் பாலுக்காக வழங்கப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என சிறிய பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது திருத்தப்பட்டுள்ள வரிகள் காரணமாக புண்ணாக்கு உள்ளிட்ட தீவனங்களின் விலைகள் அதிகரித்தமை, புற்கள் வெட்டும் இயந்திரங்களின் விலைக்ள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் ஒரு லீற்றர் பாலுக்காக செலுத்தப்படும்110 ரூபாய் போதுமானதாக இல்லை என வலியுறுத்துகின்றனர்.

இதன் காரணமாக பால் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சிறிய பால்மா உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்காமை, அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டிய நிவாரணம் உரிய வகையில் வழங்காமை உள்ளிட்ட காரணிகளால் தங்களது தொழிற்றுறை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிறிய பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** சுழிபுரம், பத்தானைக்கேணியடி தொல்புரம் வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, குறிகட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு அரசடி சந்தி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், மகாறம்பைக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மூர்வீதி, இளையோர் சேவை மையத்தடி, யு.சி மைதானம்-மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் எகிப்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவின் சபாநாயகருமான மொஹமட் நஷீட் மற்றும் நோர்வேயின் முன்னாள் சுற்றாடல் மற்றும் காலநிலை அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு–கிழக்கு மக்களுக்கு
# கௌரவமான அரசியல் தீர்வு கோரி கவனயீர்ப்பு முன்னெடுப்பு




(மன்னார்)

வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 70 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முழங்காவிலில் இடம்பெற்றது. இதில் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மதத் தலங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுவீகரிக்காதே என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். (நி-315)



பத்மஸ்ரீ கமலஹாசனின் மக்கள் நீதி மைய மாநில பிரிவு செயலாளரும் சட்டத்தரணியுமான எம்.ஸ்ரீதர் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடினார். குறித்த சந்திப்பு நேற்று காலை கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்றது. (படம்- யதுபாஸ்கரன்)

## பெரும்போக பயிர்ச்செய்கைக்கான
# உரம் வழங்கி வைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு பெரும்போகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான முதற்கட்ட மானிய உரம் கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

எழுபது வீதமான இரசாயன உரத்தையும் முப்பது வீதமான சேதன உரத்தையும் பயன்படுத்தி இம்முறை விவசாய நடவடிக்கை முன்னெடுக்கும் விதமாக இந்த வாரம் முதல் சகல கமநல சேவை நிலையங்களிலும் முதற்கட்ட இரசாயன உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மூன்று கட்டங்களாக இவ்வுர விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முழங்காவில், பூநகரி, இராமநாதபுரம், புளியம்பொக்கணை, கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி, பளை ஆகிய கமநல சேவை நிலையங்கள் ஊடாக குறித்த உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி-315)

# தீந்தமிழ் இலக்கண நூல் வெளியீட்டு விழா



(குப்பிழான்)

தென்மராட்சியின் புகழ்பூத்த தமிழாசிரியர் அ.க.தர்மராஜா எழுதிய தீந்தமிழ் இலக்கணம் எனும் நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் தென்மராட்சி கலை இலக்கிய அணியினரின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி நூலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் வெளியிட்டு வைக்கத் தெகிவளை தமிழ் மகா வித்தியாலய அதிபர் சோம. முரளி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (நி-18)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 280 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 300 |
| தக்காளி | 260 | 280 | 270 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 200 |
| கோவா | 420 | 400 | 400 | 440 |
| கரட் | 300 | 380 | 400 | 450 |
| பூசணி | 180 | 160 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 130 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 400 | 200-500 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 220 |
| பாகற்காய் | 700 | 600 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 250 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 400 |
| லீக்ஸ் | 280 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 180 | 350 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | 550 | 700 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 700 | 800 |
| போஞ்சி | 600 | 450 | 420 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 120 | 120 |
| தேசிக்காய் | 600 | 450 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 370 | 400 |
| முள்ளங்கி | 140 | 160 | 140 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 25 | 100 | 40 | 60 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 150 |

## மாந்தை கிழக்கில்
# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு
## மக்கள் குற்றச்சாட்டு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வடகாடுப்பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பெருமளவான பயிரழிவுகள் ஏற்படுவதாகவும் இப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு வடகாடு பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்கள் ஆகியவற்றுக்குள் தொடர்ச்சியாக காட்டுயானைகள் உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன் ஊர்மனைகளுக்குள் புகும் காட்டுயானைகள் மா, பலா, தென்னை, போன்ற மரங்களையும் அழித்து வருகின்றன.

கடந்த 7 ஆம் திகதி இரவு ஊர்மனைக்குள் புகுந்த காட்டு யானைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. (நி-315)

# முகமது நபிகளின் ஜனன தின நிகழ்வு

(அராலி)

இஸ்லாமிய மக்களால் கொண்டாப்படும் முகமது நபிகள் நாயகத்தின் ஜனன தின துவாப் பிரார்த்தனை நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் சிறப்பாக இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு நேற்று பெரிய மொஹிதீன் ஜும்மாப் பள்ளிவாசலில் சிறப்பான துவாப் பிரார்த்தனையும் நபிகள் நாயக தர்மத்தில் காட்டிய வழிமுறைகள் என்ற கருப்பொருளில் குத்பா பிரசங்கமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வு மௌலவி சுலையூமான் ஜபர் தலைமையில் நடைபெற்றது. (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா செல்ல...

ளது.

இந்த இந்திய விஜயத்தின் போது இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் புவிசார் அரசியல் விடயங்கள் குறித்து முக்கியமாக கவனம் செலுத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## போதை...

தியில் 777 போதை மருந்து வில்லைகள் மற்றும் கேரளாகஞ்சாவுடன் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கொக்குளாய் பகுதியைச் சேர்ந்தவர். கைது செய்யப் பட்டபெண்டம்விசாரணைகள் நடை பெற்று கிளிநொச்சி நீதிமன்றில் முன்னி லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ்நிலையப் பொறுப்ப திகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (4-7,33,104,316)

## தரம் 10 முதல்...

வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன் னிட்டு அமைச்சில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயர்கல்வியிலும், இடைநிலைத் துறையிலும், முதன்மைத் துறையில் தொடர்புடைய மாற்றங்களுடன் புதுமை கள் செய்யப்பட வேண்டும்.

நனோ தொழில்நுட்பம், பயோ டெக் னாலஜி, இயந்திர கற்றல் போன்ற பாடங்கள் பல்கலைக்கழகப் பாடங்களில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் நமது குழந்தைகளின் அறிவு, உலகின் வளர்ந்த நாடுகளில் உயர்கல்வி படிக்கும் குழந்தைகளின் அறிவுக்கு சமமாக இருக்க வேண்டும்.

பேராசிரியர்களின் ஒப்புதலுடன், பல்கலைக் கழக அளவில் உயர்கல்வி பாடத்திட்டங்களும், இடைநிலைக் கல்வி யும் நவீனப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். (4-7)

## தனித்தனியாக...

கனைத் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மீண்டும் டீல்கார மோசடிக் கும்பல் ஒன்று சேர்ந்து எழுந்து நிற்கத் தயாராகி வருகின்றது.

இதற்காக ஒன்றிணையுமாறு ஒருவர் (ரோஹித அபேகுணவர்த்தன்) அழுது கொண்டே பிச்சை எடுப்பது போல கோரி க்கை விடுக்கின்றார்.

ஆனால், அவ்வாறு அழுகின்ற அவ ருக்கு இந்த நாட்டில் இருநூற்றி இருபது இலட்சம் மக்கள் இன்னும் அழுது கொண் டேவாழ்கிறார்கள் என்பது புரியவில்லை.

தங்கள் குழந்தைகளுக்குச் சிறிதளவு பால்மாவைக்கூட கொடுக்க முடியாமல் தாய் மார்கள் அழுகின்றார்கள். உரங்கள் இல்லாததால் விவசாயிகள் அழுகின் றார்கள்.

எதிர்காலமின்றி இளைஞர் தலை முறையினர் குரல் எழுப்புகின்றனர். பொதுவாக 220 இலட்சம் பேரும் அழுது கொண்டே வாழ்கின்றார்கள். அது அவர் களுக்குப் புரியாமல் இருப்பது ஆச்சரிய மாகவுள்ளது எனத் தெரிவித்தார். (4-7)

## காலிமுகத்திடலி...

கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது உயி ரிழந்தவர்களை நினைவு கூரும் வகை யில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எந்த வொரு அமைப்பினையும் பிரதிநிதித்துவப்ப டுத்தும் வகையில் பதாதைகள் எவற்றை யும் காட்சிப்படுத்தியிருக்கவில்லை.

எனினும் அவர்கள் கடந்த மே மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 9 ஆம் திகதி யன்றும் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டனர்.

இதன் போது கடந்த ஆர்ப்பாட்டக் காலங்களில் வெவ்வேறு காரணிகளால் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற் கும், மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களை நினைவுபடுத்துவதற்கா கவுமே தாம் இங்கு கூடியிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

எவ்வாறிருப்பினும் அவர்களை அங்கி ருந்து கலைப்பதற்கு பொலிஸார் முயற் சித்த போதே, அங்கு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்ணொ ருவரை கைது செய்ய பொலிஸார் நடவ டிக்கை எடுத்த போது, அதற்கு அங்கிருந்த வர்கள் இடமளிக்காமல் பொலிஸாருடன் முரண்பட்டனர்.

எனினும் சிறிது நேரத்தின் பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலை ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## சர்வஜன வாக்கெ...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கத்தினருடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந் துரையாடலின் போது இதனைத் தெரி வித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் நாட்டில் பெரும்பான்மையானோர் தற் போதுள்ள அரசியல் முறைமையை எதிர்க் கின்றனர். எனவே அவர்கள் எதிர்பார்க் கும் அரசியல் முறைமை உருவாக்கப்பட வேண்டும்.

அத்தோடு பிரதேசசபைகளின் நிறை வேற்று அதிகாரம் தனித் தலைவருக்கு பதிலாக தலைவரை பிரதானமாகக் கொண்ட குழுவிற்கு வழங்கப்பட வேண் டும். அடுத்த பிரதேசசபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த திருத்தங்களை மேற் கொள்வதற்கான சட்ட வரைபை தயாரிப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (4-7)

## 22 ஆவது திருத்...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில், "அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இதுவரையில் கலந்துரையாடப்படவில்லை.

எனினும், தற்போது முன்வைக்கப் பட்டுள்ள இச்சட்ட மூலத்தின் மூலம் எதிர்காலத்தில் அதி களவான திருத் தங்கள் மேற்கொ ள்ளப்படலாம்.

22ஆவது திருத் தச் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்ப டும் திருத்தங்கள் ஜனநாயகம், மக் கள் இறையாண் மை ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் இருக்க வேண்டும்.

19ஆவது திரு த்தச் சட்டம் எனது ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட் டது. எனினும், 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் ஆதரவாக வாக்க ளிக்கவில்லை" என அவர் குறிப்பிட்டு ள்ளார். (4-7)

## 50 சத...

கையினை 4 ஆயி ரமாக குறைக்கவு ள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சபை திட் டத்தை அமுலாக் கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உத்தேசித் துள்ளதாக ஜனாதி பதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (4-7)

## சர்வ...

முற்பட்ட காலத்தில் சர்வதேசம் கடும் அதிருப்தியை வெளிப் படுத்தியது.

ஊழல், மோச டிகள் உள்ளிட்ட பல் வேறு குற்றச்சாட் டுக்கள் குறித்து சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு இலங்கையைச் சர்வதேச நாடுகள் புறக்கணிக்கும் நிலை காணப்பட்டது.

2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணை யுடன் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேசத் தின் ஒத்துழைப்பையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். நல்லாட்சி அரசு சர்வதே சத்தின் மத்தியில் நன்மதிப்பைப்பெற்றது.

கடந்த இரண்டரை வருட காலத்துக் குள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து சர்வதேசம் அதிக கவனம் செலுத்தி யுள்ளது.

இலங்கையில் பொருளாதாரப் பாதிப்புக் கான காரணத்தை சர்வதேசம் பகிரங் கமாக அறிவித்துள்ளது.

"இலங்கையின் நல்லிணக்கம், பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" என்ற தலைப்பில் ஐ.நா. வின் புதிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பெரும் பாலான நட்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்துள் ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். (4-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13060)

**076 825 7716 (ஆகாஸ்)**

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

Visa Extension

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS (C-4921)

**0777-068-777**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (13058)

---

தமிழ்/ ஆங்கில மொழி மூலம்

## A/L இரசாயனம்
## O/L கணிதம்

யாழ். நகரப் பகுதிகளில் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

தொடர்பு (13021)

**071 257 9018**

---

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

Passport அவசியமில்லை

**55'000 விசா**

உடனே பதியுங்கள்

ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

V2 Travels and Tours Facebook (C-4921)

**V2 Travels 0768226240 0768226244**

---

விற்பனை முகவர்கள்

## தேவை

யாழில் உள்ள பிரபல ஆயுர்வேத அழகுசாதன, மருந்துப் பொருட்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு விற்பனை முகவர் தேவை.

தொடர்புகளுக்கு (13051)

**076 381 5199**

---

டிப்பர் வாகனம்
உடன்

## தேவை

06 சில்லு, 10 சில்லு
டிப்பர் வாகனம் உடன் தேவை

தொடர்புகளுக்கு (C-5062)

**077 071 6329**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
**திரு. இ. நகுலேஸ்வரன் (நகுலன்)**
அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **குணமணி இளையதம்பி**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**"90 Batch" நண்பர்கள்**
**யா/உசன் இராமநாதன் ம.வி**

(13061)

---

## கட்டிடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் (யாழ்.NDB வங்கிக்கு மிக அருகாமையில்) 3 மாடிகள் கொண்ட கட்டிடம் வாடகைக்கு உண்டு.

- யாழ்.நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.
- முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வாடகைக்கு தரப்படும்.
- நிதிசார் நிறுவனங்கள் (Financial Institutions) மற்றும் கல்விசார் நிறுவனங்கள் (Educational Institutions) என்பவற்றுக்கு மிகப்பொருத்தமானது.
- வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

(13044)

தொடர்புகளுக்கு

**074 036 8046**

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13062)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 241 7589**

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- தரகர் தேவையில்லை.
- A9 வீதி முகப்புடன் காணி உள்ளது.

**077 874 8135, 077 408 2649**

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :-
  காலை 6.00 - மாலை 6.00

தொடர்பு

**077 911 6983, 076 755 8606**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் வீதியில் இரண்டாவது காணி.
- புத்தூர் சந்தியிலிருந்து 1km தூரம்
- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்.
- நன்னீரூற்று.
- நல்ல சூழல்

(13063)

தொடர்பு

**077 623 4204, 076 436 5814**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org